24th September 1958]

Elementary Education and Basic Education Courses.

* 503 *Q.*—SRI A. VEDARATHNAM : கனம் நிதி அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) ஆரம்பக் கல்வியை எட்டு (8) வருடப்படிப்பிலிருந்து ஏழு (7) வருடப் படிப்பாக மாற்றி அதற்குரிய (ஸெலபஸ்) பாட திட்டங்கள் தயார் செய்தாகிவிட்டதா ?

(ஆ) எப்பொழுது இப்பாடத்திட்டம் அமலுக்கு வரும் ?

(இ) இத் திட்டத்தை அனுசரித்து ஆதாரக் கல்விப் படிப்பையும் ஏழு (7) வருடப் படிப்பாக மாற்றும் உத்தேசம் உண்டா ?

(ஈ) அப்படியானல், எப்போதிலிருந்து ?

THE HON. SRI C. SUBRAMANIAM : (*a*) Yes, Sir.

(*b*) The revised syllabus have been introduced in standards I to III of elementary schools in the current year (1958–59).

(*c*) No final decision has yet been taken regarding reorganisation of Basic Education also as a seven-year course.

(*d*) Does not arise.

SRI A. VEDARATHNAM : மற்ற கல்வியின் காலத்தை ஏழு வருஷமாகக் குறைத்துவிட்டு ஆதாரக் கல்வியை கற்பதற்கு மாத்திரம் 8 வருஷம் என்று வைத்திருப்பதாவது ஆதாரக் கல்வியைக் கற்பவர்களுக்கு கஷ்டத்தை ஏற்படுத்தாதா ? அந்தக் கஷ்டம் ஏற்படாதிருக்க என்ன செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அந்தக் கஷ்டத்தை நீக்குவதற்காகத்தான் ஒரு கமிட்டியை ஏற்படுத்தலாம் என்று கனம் அங்கத்தினரிடம் முன்பு சொன்னது. 'அது தேவையில்லே, ஆதாரக் கல்வியைப் பொறுத்த வரையில் எட்டு வருஷமே இருந்து வரலாம்' என்று அவர்கள் சிபார்சு செய்திருக்கிருர்கள். அது இப்போது பரிசீலனையில் இருந்து வருகிறது.

Dispensaries in Tanjore District.

* 504 *Q.*—SRI M. C. MUTHUKUMARASWAMY : கனம் ரெவினியு அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) தஞ்சை ஜில்லாவில் அரசாங்கத்தாலும் ஸ்தல ஸ்தாபனங்களாலும் நடத்தப்படும் மருத்துவ நிலையங்கள் எத்தனை ?

(ஆ) அவைகளில் வேலே செய்யும் மெடிகல் ஆபீசர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களில் ஹரிஜன வகுப்பைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர் ?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) In Tanjore district 9 hospitals, 12 Primary Health Centres and 2 dispensaries are maintained by Government. Five hospitals and 56 dispensaries are maintained by local bodies.

(*b*) 115.

(*c*) 2.

SRI M. C. MUTHUKUMARASWAMY : ஸ்தல ஸ்தாபனங்களால் நடத்தப்படும் ஆஸ்பத்திரிகளில் நோயாளிகள் வந்தால் மருந்து இல்லேயென்று சொல்லி, மருந்தை எழுதிக் கொடுத்து வாங்கிவரச் சொல்கிருர்கள்.